25-3-1993

Registered as a News Paper   பக்கங்கள் 04   விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM   PeoplesDaily   மக்கள் தினசரி

நாதம் 04   திருவள்ளுவர் ஆண்டு 2024   பங்குனி 12   [25-03-1993]   வியாழக்கிழமை   ஓசை 35

## விசேட ஆசிரியர்களுக்கு தொடர்ந்து பற்றாக்குறை

யாழ். மாவட்ட பாடசாலைகளில் விவசாயம், நடனம், சித்திரம் போன்ற பாடங்களை கற்பிக்கவென நியமிக்கப்பட்ட பயிலுனர் ஆசிரியர்களில் சிலர் தமது பாடங்கள் தவிர்ந்த வேறு பாடங்களை கற்பித்துவருவதாகவும், இதனால் இப் பாடங்களை கற்கும் மாணவர்கள் பாதிப்படைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இக் குறித்த பாடங்களில் காணப்பட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்பவே இவர்கள் நியமிக்கப்பட்டார்கள் எனவும் இவர்கள் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களை கற்பிக்கச் செல்வதால் இவ் வெற்றிடங்கள் மீண்டும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் இப்பாடங்களை (4 ஆம் பக்கம் பார்க்க)

# அங்கிலிக்கன் ஆயர், பிக்குகள் விரைவில் யாழ். வரத் திட்டம்

[கொழும்பு]

அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்ணான்டோ இரு பௌத்த பிக்குகளுடன் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதான ரீதியிலான தீர்வொன்றைக் காணவும் யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை அறிந்துகொள்ளும் பொருட்டுமே அங்கிலிக்கன் ஆயர் இரு பௌத்த பிக்குகளுடன் யாழ்ப்பாணம் வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த ஜனவரியில் ஆயர் கென்னத் பெர்ணான்டோ யாழ்ப்பாணம் வந்து திரும்பியதும், பௌத்த பிக்குகளையும் புத்திஜீவிகளையும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் செல்லவுள்ளதாக கொழும்பில் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

இதன் பிரகாரம் முதலில் இரு பிக்குகளுடன் விரைவில் யாழ்ப்பாணம் வருவதற்கு ஆயர் திட்டமிட்டுள்ளதாக அறியவருகின்றது.

இதேவேளை யாழ். வரவுள்ள ஆயர் விடுதலைப் புலிகளுடன் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஊடாக

## நெல், அரிசி, பால்மா வழங்க விடுதலைப்புலிகள் ஏற்பாடு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக நெல்லும், அரிசியும், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான பால்மாவும் நியாய விலையில் வழங்க விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பொறுப்பாளர் செ தமிழேந்தி அறிவித்துள்ளார். விபர அறிக்கை நாளை வெளியாகும்.

## மகாபொல புலமைப்பரிசில் பெறுவோர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மகாபொல புலமைப்பரிசில் வைபவத்தில் பங்குபற்ற உருத்துடைய மாணவர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு தத்தம் அடையாள அட்டையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கிற்கு சமுகம் கொடுக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுள்ளார்.

இந்த வைபவத்திற்கான அழைப்பிதழ் கிடைக்கப்பெற்ற மாணவர்கள் அல்லாத ஏனையோர் வரும் 27 ஆம் திகதி அன்று வைபவத்திற்கு வரும்போது அழைப்பிதழை தம்முடன் எடுத்துவரும்படி அவர் மேலும் கேட்டுள்ளார். (சி)

## தீவு பகுதிவிஜயத்தைமுடித்து யாழ். ஆயர் திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிக்கு மதரீதியான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண. ம. இ. பயஸ், யாழ். பெரியகோவில் பங்குத் தந்தை ஜெபநேசன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

இவர்கள் நெடுந்தீவில் நான்கு தினங்கள் தங்கியிருந்து சமய நிகழ்ச்சிகளில் பங்குபற் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

எழுவைதீவைச் சேர்ந்த 8 பேர் பற்றி

## ஒருவருடத்திற்குமேலாகியும் தகவல் எதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கு பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட எட்டுப் பேருக்கு என்ன நடந்தது என்று இதுவரை அறிய முடியாமல் அவர்களின் உறவினர்கள் அவஸ்தைப்படுவதாக தெரியவருகின்றது.

இவர்கள் கடந்த 4-11-91 தொடக்கம் காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது. இவர்களின் விபரம் வருமாறு;

ப. யோ. தேவராசா (வயது (4 ஆம் பக்கம் பார்க்க)

## விஸ்வமடு பகுதியில் புக்காரா குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

விஸ்வமடு பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் ஒன்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியது.

நேற்று முன்தினம் காலை 8-15 மணியளவில் விஸ்வமடு பகுதியை வட்டமிட்ட மேற்படி குண்டுவீச்சு விமானம் மக்கள் வாழ் விடங்களைக் குறிவைத்து குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டது. இதன்போது தொட்டிலடி பகுதியில் இரண்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

## பழுகாமம் கிராமத்தில் இராணுவ சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பத் தலைவர்கள் மற்றும் சிறுவர்கள் உட்படப் பலரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் காலை பத்துமணியளவில் பழுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரே பொதுமக்கள் பலரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு

## அதிபர் நியமனத்திற்கு வெட்டுப்புள்ளி தேவை

தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிபர் தெரிவுக்கான பரீட்சையில் பாடரீதியாக சராசரி 40 புள்ளிகள் பெறாதவர்களை அதிபர் பதவிக்கு நியமிக்கக்கூடாது. சராசரி 21 புள்ளிகளைப் பெற்றவர்களை அதிபர்களாக நியமிப்பது அதிபர் சேவையின் தரத்தை குறைத்துவிடும், பல்கலைக்கழக மானியங்கள் குழுவைப் போன்று அதிபர் சேவை நியமனத்தில் ஒரு வெட்டுப் புள்ளியை நியமிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

கல்விச் சேவைச் சபைத் தலைவர் ஜோர்ஜ்மென்டிசைச் சந்தித்துப் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் சமர்ப்பித்துப் பேசிய [4. ஆம் பக்கம் பார்க்க]

## மட்டு. பல்கலைக்கழகம் படையால் சுற்றிவளைப்பு

மூன்று பொது மக்கள் தடுத்துவைப்பு

நேற்று முன்தினம் அதிகாலை வந்தாறுமூலை பல்கலைக்கழக விடுதிகள் உட்பட அதன் சுற்றுப்புறங்களை திடீரென சுற்றிவளைத்த படையினர் பல்கலைக்கழக மாணவ மாணவியர் மற்றும் உத்தியோகத்தர்களையும் அப்பகுதி பொதுமக்களையும் முகாமிற்கு கொண்டுசென்றனர்.

தீவிர விசாரணையின் பின் 3 பொதுமக்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

மாகாணசபைத் தேர்தலில்

## ஐ. தே. கவை ஆதரிக்க இ. தொ. க. நிபந்தனை

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையகத்தில் ஆளும் ஐ.தே. கவை இலங்கை

டன் இ. தொ. க. கூட்டை வைத்திருந்த போதிலும் தனது முக்கிய கோரிக்கைகளை

# தமது எதிர்காலத்தை தீர்மானிக்க

நாயகம் ஆண்டகை, மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண. ம. இ. பயஸ், நான்கு தினங்கள் தங்கியிருந்து சமய நிகழ்ச்சிகளில் பங்கு பற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

படையால் சுற்றிவளைப்பு

மூன்று பொது மக்கள் தடுத்துவைப்பு

நேற்று முன் தினம் அதிகாலை வந்தாறுமூலை பல்கலைக்கழக விடுதிகள் உட்பட அதன் சுற்றுப்புறங்களை திடீரென சுற்றிவளைத்த படையினர் பல்கலைக்கழக மாணவ மாணவியர் மற்றும் உத்தியோகத்தர்களையும் அப்பகுதி பொதுமக்களையும் முகாமிற்கு கொண்டுசென்றனர்.

தீவிர விசாரணையின் பின் 3 பொதுமக்கள் படையினரால் தடுத்து வைக்கப்பட்டனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனர்.

எழுவைதீவைச் சேர்ந்த 8 பேர் பற்றி

## ஒருவருடத்திற்குமேலாகியும் தகவல் எதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கு பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட எட்டுப் பேருக்கு என்ன நடந்தது என்று இதுவரை அறிய முடியாமல் அவர்களின் உறவினர்கள் அவஸ்தைப்படுவதாக தெரியவருகின்றது.

இவர்கள் கடந்த 4-11-91 தொடக்கம் காணாமல் போயுள்ளதாக தெரியவருகின்றது. இவர்களின் விபரம் வருமாறு;

ப. யோ. தேவராசா (வயது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புக்காரா குண்டு வீச்சு

(கிளிநொச்சி)

விஸ்வமடு பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் ஒன்று குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தியது.

நேற்று முன்தினம் காலை 8-15 மணியளவில் விஸ்வமடு பகுதியை வட்டமிட்ட மேற்படி குண்டுவீச்சு விமானம் மக்கள் வாழ் விடங்களைக் குறிவைத்து குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டது. இதன்போது தொட்டிலடி பகுதியில் இரண்டு குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

## பழுகாமம் கிராமத்தில் இராணுவ சுற்றிவளைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமம் கிராமத்தைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் குடும்பத் தலைவர்கள் மற்றும் சிறுவர்கள் உட்படப் பலரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

நேற்று முன்தினம் காலை பத்துமணியளவில் பழுகாமம் சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரே பொதுமக்கள் பலரைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட பொது மக்கள் அனைவரும் முகமூடிகள் முன் நிறுத்தப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மாகாணசபைத் தேர்தலில்

## ஐ. தே. கவை ஆதரிக்க இ. தொ. க. நிபந்தனை

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் மலையகத்தில் ஆளும் ஐ.தே. கவை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரிக்க வேண்டுமானால் அதற்கு பதிலாக பெருமளவு சலுகைகளை மலையக மக்களுக்கு தர வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் நிபந்தனை விதித்துள்ளது.

இப்போது ஆளும் கட்சியுடன் இ. தொ. க. கூட்டை வைத்திருந்த போதிலும் தனது முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றா விட்டால் மாகாணசபை தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனித்தே போட்டியிடும் என்றும் அக்கட்சி அறிவித்துள்ளது.

1988இல் நடைபெற்ற தேர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# தமது எதிர்காலத்தை தீர்மானிக்க தமிழருக்கு பூரண உரிமையுண்டு

## யுக்திய ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்குசுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டும். அவர்களது எதிர் காலத்தை சிங்கள மக்கள் தீர்மானிக்கவியலாது. எந்தவித அச்சுறுத்தலுமன்றி தமது எதிர்காலத்தை தீர்மானிக்க தமிழர்களுக்கு பூரண உரிமையுண்டுஎன்பதை ஆணித்தரமாக கூறுகின்றேன் என யுத்திய எனும் சிங்கள நாளிதழின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்

கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது; சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். எனவே இந்த யுத்தத்திற்கு சிங்கள ஆளும் கட்சிகளே பொறுப்பானவை.

ஓர் அரசியல் தீர்வை முன்வைக்காது புலிகளையோ அல்லது தீவிரப்போக்கையோ ஒரு போதும் முறியடித்துவிட முடியாது. எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் எமது பத்திரிகையூடாக பிரபாகரன் சிங்கள மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்பினால் அதையும் வெளியிட தயாராகவுள்ளோம் என்றும் யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

## ஆசிகுளம் முகாமிலிருந்து தமிழ் அகதிகள் வருகை

(வவுனியா)

இந்தியாவிலிருந்து திரும்பி வந்து வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்த பெருந்தொகையிலான அகதி மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி வந்து சேர்ந்தனர்.

பல மாதங்கள் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள ஆசிகுளம் அகதி முகாமில் பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வந்த இந்த அகதி மக்கள் தமது சுயவிருப்பத்தின் பேரில் வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வந்து சேர்ந்தனர்.

தொடர்ந்து அகதி வாழ்க்கை வாழமுடியாது. மீளச் சென்று தமது வீடுகளிலேயே குடியமர விருப்பம்தெரிவித்தே இவர்கள் அரசாங்க அதிகாரிகளின் அனுமதியின் பேரில் வந்து சேர்ந்தனர்.

அகதிகளுக்கான ஐ. நா.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்தோர் படிவம் பூர்த்தி செய்யவும்

சொந்தஇடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வேறிடங்களில் தங்கியிருப்போர் தாங்கள் தற்சமயம் தங்கியிருக்கும் பகுதி கிராமசேவை உத்தியோகத்தரிடம் ஒருங்கிணைக்கப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு படிவம் ஒன்றினைப் பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி யாழ். செயலகத்தில் யாழ். உதவி அரசாங்கஅதிபர் தலைமையில் ஊர்காவற்றுறை வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது; இடம்பெயர்ந்து வந்து தற்சமயம்தங்கியிருக்கும் இடத்தில் மேற்படி படிவம் ஒன்றை மட்டுமே பூர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்றும் ஆனால் நிவாரணம் மற்றும் விடயங்களுக்கு அவர்களுடைய நிரந்தர கிராம சேவையாளர் மூலமே பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது

இவர்கள் தமது நிவாரணப் பொருள்களையும் தத்தமது சொந்த இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலேயே பெறவேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. [சி]

## பூசா முகாம் கைதிகள் சுழற்சி உண்ணாவிரதம்

(கொழும்பு)

காலி பூசாமுகாமில் நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் இம்மாதம் 28-ம் திகதி தொடக்கம் சுழற்சி முறை உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து தாம் விசாரணை எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், எனவே தம்மை விடுதலை செய்ய வேண்டும், அல்லது ஒரு மாதத்திற்குள் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும், வழக்கு தாக்கல் செய்ய காலதாமதம் ஆகுமாயின் பிணையில் விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலியில் பீரங்கித் தாக்கு மருத்துவபீட மாணவன்பலி

## கலைப்பீட மாணவர்கள் இருவர் காயம்

கிளாலி கரையோரப் பகுதியை நோக்கி சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்களினால் யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவர் பலியானதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 6.30 மணியளவில் கிளாலி கடற்பரப்பில் ரோந்து சென்ற சிறிலங்கா கடற்படைப் பீரங்கிப் படகொன்று கிளாலி கரையோரப் பகுதியை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் யாழ. பல்கலைக்கழக மருத்துவ பீட முதலாம் வருட மாணவன்ஞானசூரியர்வில்சன் நிக்கலஸ் [வயது 21] பலியானார். இவர்கரம்பனைச்சேர்ந்தவரெனவும் மகாபொல பரிசில் பெற சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் கலைப்பீட மாணவர்களான டொன்பொஸ்கோ [வயது24], (கரம்பன்) ம. மேகநாதன் (துன்னாலை) [வயது23] ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும்மகாபொல புலமைப் பரிசில் பெற சென்றவர்களை வழி அனுப்ப சென்றவர்கள் எனத் தெரியவருகிறது.

இவர்களில்பொஸ்கோ யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தைத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# ஆனையிறவு, மாதகலில் பாரிய படை நடவடிக்கை

## விரைவில் ஆரம்பிக்கப்படுமாம்

(கொழும்பு)

ஆனையிறவு, மாதகல் இராணுவ முகாம்பகுதிகளில் விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த இருஇராணுவ முகாம்களினதும் பாதுகாப்பு எல்லைகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் இந்நடவடிக்கைகளுக்காக மேலதிக படைகள் விமானம் மூலம் குவிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்தவாரம் ஆனையிறவு வெற்றிலைக்கேணி, முகாம்களைச் சூழவுள்ள பகுதிகளில் கடும் விமானத் தாக்குதல்மேற்கொள்ளப்பட்டுவருவது தெரிந்ததே.

## வலி மேற்குப் பகுதியில் மரணமடைந்தோர்

(யாழ்ப்பாணம்)

வலி-மேற்கு பகுதியீல் இராணுவ நடவடிக்கையின் பின்னரும் அங்கு தங்கியிருந்தவர்களில் மரணம் அடைந்தவர், மரணமடைந்த திகதி விபரங்கள் வருமாறு:

செல்வராஜா (வயது 60) இளவாலை [9-9-92], தையலம்மா குமாரசாமி [வயது72] அளவெட்டி தெற்கு[19-9-92] எஸ். நடராஜா [வயது 76] சித்திரமேழி [14-10-92], அன்னமேரி பூலோகம் இமானுவேல் ஜோசப் [வயது 76] மாதகல் [22-10-92],கே. அப்புத்துரை [வயது 82] அளவெட்டி [11-11-92] இனம் தெரியாத பெண் [21-11-92] தெல்லிப்பழை, சுந்தரம் சிவகுரு [வயது 55] மாவிட்டபுரம் [7-11-92], நல்லப்பு சின்னதங்கம் [வயது 83] தெல்லிப்பழை [9-12-92], சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை [வயது 80]மாதகல்[9-12-92], எஸ். சண்முகநாதன் (வயது 82] சித்தன்கேணி [15-12-92, ஜி. இமானுவல் ஜோசப் [வயது 80] மாதகல் [21-12-92], கே. ஜோசப் [வயது 70] இளவாலை [24 1-93], சென் ஜேம்ஸ் நீக்கிளம்பிள்ளை [வயது 75], ஏ. செபமாலை சென் அம்றீஸ் [11-10-92] [நி, பா.]

## வரி விளம்பரம்

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதிலும் கைதேர்ந்தவர்கள்). (சி-6126)

### தவறிவிட்டது

க. குபேரகுலசிங்கம் இல. 691263657V என்பவரது அடையாள அட்டை 3ஆம் திகதி புதன்கிழமை பொற்பதி—பிறவுண் வீதியில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (4557)

### சோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதவும் கைரேகை, எண்சோதிடம் பார்க்கவும். விவாகப் பொருத்தம், வீட்டுக்கு நிலையம் நிச்சயிக்கவும் நேரில் சந்திக்கலாம். தினமும் காலை 8-30—12-30, பிற்பகல் 3-00—6-00. த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா, சோதிட நிலையம், 384. கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (4560)

### சத்தியா நகைத் தொழிலகம்

சகல விதமான நகைத் திருத்த வேலைகளும் மற்றும் வெள்ளி, செப்பு, பித்தளை போன்ற ஆபரணங்களுக்கும் (கிளிற்) தங்கம் பூசி உடனுக்கு உடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம், 176/5 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். (சி-6261)

### திருட்டுப்போன சைக்கிள் மீட்பு

(நெல்லியடி)

புலோலி தெற்கு கந்த முருகேசனார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் முன்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான ஈஸ்ரேன் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

சைக்கிள் திருடப்பட்டு சுமார் அரைமணி நேரத்தின் பின்னர்

# கொம்பனித்தெரு பகுதி கடத்தல்காரர் குகை

## துப்பாக்கிகள் தாராளமாம்

கொம்பனித்தெருப் பகுதி போதைப்பொருள் கடத்தல் கும்பல்களின் கேந்திர நிலையமாக மாறியுள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மாபியா பாணியில் ரி-56 ரக துப்பாக்கிகளும், ஏ கே-47 ரக துப்பாக்கிகளும் இங்கு கடத்தல் காரர்களினால் சாதாரணமாகக் காவிச்செலப்படுகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் தொடர்புடைய கடத்தல் கும்பல்களிடையே இப்பகுதி வீதியில் திடீர்திடீர் என நடக்கும் துப்பாக்கிச்சண்டைகளினால் இங்கு மக்கள் பீதியுடன் வாழ்வதாகவும் அப்பத்திரிகை கூறுகின்றது. கடந்த சனியன்று மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி நபர் ஒருவர் எதிர் கும்பல் ஒன்றின் தலைவர் ஒருவர் மீது நடத்திய சரமாரியான துப்பாக்கிச் சூட்டில் பாதசாரி ஒருவர் பலியானமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு கல்விக்கோட்டகல்வி வளர்ச்சிக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கோட்டப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

நடப்புவருட வேலைத்திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படுவதுடன் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்

### சங்காபிஷேகமும் சண்முகார்ச்சனையும்

(நெல்லியடி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, சங்காபிஷேகமும், சண்முகார்ச்சனையும் இன்று காலை 10மணிக்கு மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. (30)

## வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத்தளர்ச்சியா? உடல்பருமனா? உடல் மெலிவா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மாதவிடாய்க் கோளாறுகளா? குழந்தைகளின் பீடைகளா?

நாடுங்கள் ! நலமடையுங்கள்!!

தினமும் ) காலை 8.30 முதல் 12.30 வரை
) பிற்பகல் 3.00 முதல் 6.00 வரை

டாக்டர் த. சிவானந்தன்

**"சிவா வைத்தியசாலை"**

384. கோவில் வீதி – நல்லூர் வடக்கு.

(4561)

## விஷேட அறிவித்தல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பரீட்சைக்காக யாழ்ப்பாணத்தைத் தேர்வு நிலையமாக விண்ணப்பிக்காத சகல மாணவர்களும் தமது பதிவிலக்கத்துடன் 28-ம் திகதிக்கு முன்னர் வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

S. அருள் நங்கை,

புதிய உயர் கல்லூரி

# ஆஸ்பத்திரியில் கர்ப்பிணி நாய்க்கடிக்கு இலக்கானார்

-சங்கானையில் சம்பவம்

(சங்கானை)

பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பெண்மணி ஒருகுரை வைத்தியசாலை விடுதிக்கள் புகுந்து நாய் ஒன்று வடித்த சம்பவம் அண்மையில் சங்கானை அரசினர் மருத்துவமனையில் நடைபெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; அளவெட்டியைச் சேர்ந்த திருமதி கணேஸ் என்பவர் பிரசவத்திற்காக மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் குழந்தை ஒன்றைப் பிரசவித்த மறுநாளான கடந்த 18ஆம் திகதி அவர் வாட்டில் இருந்தபோது அங்கு புகுந்த நாய் ஒன்று அவரைக் கடித்துள்ளது.

இதனால் வைத்திய அதிகாரியின் ஆலோசனைப்படி குழந்தைக்கு பால் ஊட்ட தடைவிதிக்கப்பட்டிருப்பதுடன் தாய் வாட்டில் தங்கி 21 நாட்களுக்கு விசர்நாய்க்கடி தடுப்பூசி போடும்படியும் பணிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்நாய் அங்கு நோயாளி ஒருவரைப் பராமரித்து வந்த சிறுமி ஒருவரையும் கடித்ததுடன் காவலாளியையும் கடிக்க முற்பட்டுள்ளது. இதன்போது அக்காவலாளி அந்நாயை அடித்துக் கொலை செய்ததாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### வீரவணக்க கூட்டம்

கொடிகாமம் வட்டப் பிரதேசத்தில் மூன்றாம் மாதத்தில் வ்ரச்சாவடைந்த மாவீரர்களுடைய நினைவஞ்சலிக் கூட்டம் (28-3-93) ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் கொடிகாமம்வட்டப் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெறும். (86)

### ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழு இடம் பெயர்ந்தோர் சுயசார்புப் பயிற்சி தொழிலக ஆரம்ப விழா இன்று நடைபெறவுள்ளது.

நாவற்குழி எழுச்சிக் கட்டடத்தில் காலை 10. 30 மணியளவில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக உதவி அரச அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

## டயினமோ தேவை

½ K.W, 3 K.W டயினமோ (HONDA விரும்பத்தககது) உடன் தேவை. விற்க விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

VIDEO JEEVITHA

## வீடியோ ஜீவிதா

இல. 526, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம் சந்தி,
யாழ்நகர்.

(சி/6260)

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், இன்று (25-03-1993) வியாழன் காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

–நிர்வாகம்.

(4523)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்

## வருடாந்த பொதுக்கூட்டம்

25-03-1993இன்று வியாழன் நடைபெறவிருந்த சைவவித்

# உரிமைகளை மீட்கவே போர் தெற்கிலும் தெரிவித்தோம்

– அருட்திரு மரிய சேவியர்

[குருநகர்]

"யுத்தம் அழிவைத்தான் தருகிறது. நாம் சமாதான விரும்பிகளாகவே இருக்கிறோம். அதேவேளை எம்மிடம் இருந்து பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்கவே போராடிக் கொண்டிருக்கிறோம். என்பதை தென்பகுதியில் எமது நாடகங்கள் மூலமாகச் சாதித்து வந்தோம்.

இவ்வாறு யாழ் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் வண நீ மரியசேவியர் அடிகளார் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை மன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செ. அ. அழகுராசா எழுதிய "காலையும் மாலையும்" "மண்ணேசாட்சி மற்றும் சவரிமுத்து அடிகளார் எழுதிய" "பலிக்களம்" ஆகிய விவிலிய நாடக நூல்களின் வெளியீட்டு வைபவத்தில் தலைமையுரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நூல்களை முன்னாள் யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை வெளியிட்டு வைத்தார்.

பேராசிரியர் வண-நீ. மரிய சேவியர் அடிகளார் தொடர்ந்து பேசுகையில்;

வடபகுதி இளைஞர்கள் நடித்தது வெறும் நாடகம் அல்ல. அவர்களுக்கு யுத்தம் விளைவித்த கோலம் என்பதை எந்த விதப்பயமுமின்றி அப்பகுதி மக்கள் ஏற்கக்கூடிய விதத்தில் சாதனை புரிந்து வந்துள்ளோம்.

தமிழர்களின் பிரச்சினைகளை ஆதரித்து எழுதாத ஐலன்ட் பத்திரிகை கூட தனது கண்ணோட்டத்தில் எமது நாடகங்கள் பற்றி எழுதும் பொழுது 'வடபகுதி இளைஞர்கள் தென்பகுதி நோக்கிப் படை எடுத்தார்கள். படை எடுத்த இளைஞர்கள் எந்த வித இடைவெளியும் இல்லாமல் ஏறத்தாழ 65 நிமிடங்கள் எங்களைக்கட்டி வைத்திருந்தார்கள்' என எழுதியது" இவ்வாறு அவர் கூறினார்.

கலாநிதி வ. தியோகுப்பிள்ளை நூல்களை வெளியிட்டு வைத்துப் பேசுகையில்;

கத்தோலிக்க மக்கள் மத்தியில் வேதாகமத்தைப் பற்றி துஷ்பிரயோகம் செய்யும் நிலை ஏற்பட்டிருப்பது குறித்து ஒவ்வொரு கத்தோலிக்கரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். என்று கேட்டுக் கொண்டார்.

திரு. எஸ். பி. அல்பிரட் வரவேற்புரையையும், திரு. அ. ஜே. அன்டர்சன் நன்றியுரையையும் நிகழ்த்தினார்கள்.

அரச சார்பற்றநிறுவனப் பிரதிநிதிகளை

# சிறுவர் பாதுகாப்பு நிதிய அதிகாரிகள் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவு இணைப்பாளர் பற்றிக் பிறவுண் புறுவனும் பிரதி இணைப்பாளர் லவி கானாட்டும் நேற்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் பி. ப. 2.00 மணியளவில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் இடம்பெற்றது.

ஆஸ்பத்திரி சுகாதார வசதிகள் பற்றிய தரவுகளையும் சிறார் இல்லங்களின் தேவைகள் பற்றியும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

சுகாதாரம், உள்ளூர் உற்பத்தியை ஊக்கப்படுத்தல், உள்ளூர் மனிதநேய ஸ்தாபனங்களைப் பலப்படுத்துதல் மற்றும் அரச நிறுவனங்கள் ஊடாக சேவைகளை ஏற்படுத்துதல், போன்ற விடயங்களும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இப்பரப்புக்களில் சிறுவர் பாதுகாப்பு நிதியப் பிரதிநிதிகள் மேலதிக உதவி வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பெண்கள் தொழில் வசதி, சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கு மீளத் திருப்பியளித்தல் அடிப்படையில் நிதிஉதவி வழங்க அவர்கள் முன்வந்துள்ளதாகவும் சுய சார்புத் திட்டங்களின் கீழ் சிறார் இல்லங்களுக்கு உதவவும் விருப்பம் தெரிவித்ததாகவும் இணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-25**

போன்ற ஆபரணங்களுக்கும் (கிளிற்) தங்கம் பூசி உடனுக்கு உடன் செய்து பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம், 176/5 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-6261)

## திருட்டுப்போன சைக்கிள் மீட்பு

(நெல்லியடி)

புலோலி தெற்கு கந்த முருகேசனார் வீதியில் அமைந்துள்ள வீடொன்றின் முன்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான ஈஸ்ரேன் சைக்கிள் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

சைக்கிள் திருடப்பட்டு சுமார் அரைமணி நேரத்தின்பின்னர், அவ்வூர் மாணவர்களின் பலத்த தேடுதலின் போது, கலிகைச் சந்தியில் வைத்து, சைக்கிளுடன் திருடன் அகப்பட்டான்.

## மாணவருக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்லும் சிறார்களுக்குத் தென் இந்தியத் திருச்சபை நேற்று பரிசுப்பொருட்களை வழங்கியது ஒவ்வொன்றும் 2000 ரூபா பெறுமதிக்கு அதிகமான துணிவகைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் சப்பாத்து ஆகியன அடங்கிய பாடசாலைப் பைகளே வழங்கப்பட்டன. இந்தப் பரிசுப்பொருள்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் முகாம்களில் தங்கி வாழும் 500 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும், ஏலவே இப்பரிசில்கள் கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கைதடி ஆகிய பகுதிகளில் உள்ள முகாம்களில் வாழும் சிறார்களுக்கு வழங்கப் பட்டுள்ளதாக திருச்சபைப் பேச்சாளர் தெரிவித்தார்.

384. கோவில் வீதி - நல்லூர் வடக்கு.

(4561)

## விஷேட அறிவித்தல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி (B.A) பரீட்சைக்காக யாழ்ப்பாணத்தைத் தேர்வு நிலையமாக விண்ணப்பிக்காத சகல மாணவர்களும் தமது பதிவிலக்கத்துடன் 28-ம் திகதிக்கு முன்னர் வந்து சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

S. அருள் நங்கை,
புதிய உயர் கல்லூரி,
யாழ்.

(சி/6259)

## மங்களகரமான திறப்புவிழா

# அபிராமி மில்

இன்று 25-03-93 பங்குனி 12ஆம் நாள்
வியாழன் காலை 9.26 மணி தொடக்கம்
10-38மணிவரை வரும் சுபவேளையில்
மங்களகரமாக திறந்துவைக்கப்படும்
இத் திறப்பு விழா வைபவத்தில்
அன்பர்கள், நண்பர்கள்
அனைவரையும் வருகைதந்து
சிறப்பிக்குமாறு
அழைக்கின்றோம்.

**அபிராமி மில்**

ஐயனார் கோவிலடி, தட்டாதெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

(4559)

# மொடேண் எடியுக்கேஷன் சென்ரர்

## (கரவெட்டி)

## G.C.E (O'L) மீட்டல் வகுப்புக்கள் (பகல் நேரம்)

**ஆரம்பம்: 27-03-1993** காலை 10 00 மணி, சனிக்கிழமை

8—9 ஆங்கிலம்: திரு போஷியஸ் ஆசிரியர் 9—10 தமிழ்: திரு. விசுவாசம் ஆசிரியர்
10—11 விஞ்ஞானம் திரு. மகேந்திரம் ,, 11—12 கணிதம்: திரு. யோகராஜா ,,
பயிற்சி வகுப்பு
கணிதம்: திரு. இராமகிருஸ்ணன் ஆசிரியர் திரு. சிவராஜா ஆசிரியர்
(3418) - நிர்வாகி.

JEEVITHA

யாழ்நகர்.

(சி/6260)

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குதல், இன்று (25-03-1993) வியாழன் காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

—நிர்வாகம்.

(4523)

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின்


## வருடாந்த பொதுக்கூட்டம்

25-03-1993 இன்று வியாழன் நடைபெறவிருந்த சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களால் 27-03-93 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதனையும், பழைய நிகழ்ச்சித் திட்டமே அடிப்படையாய் அமையும் என்பதனையும் அறியத்தருகிறோம்.

கலாநிதி அ. நவரத்தினராசா
தலைவர்

கலாநிதி ந. நடேசன் திரு. க. சிவானந்தமூர்த்தி
பொருளாளர் (சி/6262) செயலாளர்

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். ராயு**

[கந்தையா - முகுந்தன்]
மானிப்பாய்.

வீரப்பிறப்பு 27 01-1968 வீரச்சாவு 25-03-1989

கதறுகிறோம் கண்ணீர் சிந்துகிறோம்.
ஓடி வரமாட்டாயா? திரும்பும்
திசையெல்லாம் உனது அழகுமுகம்
எங்கள் இதயத்தை தினமும் வாட்டுதையா

முகுந்தன் வீதி, —குடும்பத்தினர்.
மானிப்பாய். (4558)

துப் பேசினர். இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் பி.ப. 2.00 மணியளவில் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் இடம்பெற்றது.

ஆஸ்பத்திரி சுகாதார வசதிகள் பற்றிய தரவுகளையும் சிறார் இல்லங்களின் தேவைகள் பற்றியும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

சுகாதாரம், உள்ளூர் உற்பத்தியை ஊக்கப்படுத்தல், மேலதிக உதவி வழங்க முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் பெண்கள் தொழில் வசதி, சந்தைப்படுத்தல் ஆகியவற்றிற்கு மீளத் திருப்பியளித்தல் அடிப்படையில் நிதிஉதவி வழங்க அவர்கள் முன்வந்துள்ளதாகவும் சுய சார்புத் திட்டங்களின் கீழ் சிறார் இல்லங்களுக்கு உதவவும் விருப்பம் தெரிவித்ததாகவும் இணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-25

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக்கொல்லப் பட்ட விநாயக முதலியார் வீதியைச் சேர்ந்த தமிழ் மாணவன். கல்லூரி வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1987ஆம் ஆண்டு அரியாலையில் காவல்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

அராபத் (பாபு ஜோண் பாலேந்திரா- 17, அரியாலை கிழக்கு - யாழ். )

1988ஆம் ஆண்டு மட்டு - தேசவிரோத சக்திகள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். அரசன் (ராம்குமார் - தாமரைக்கேணி-மட்டு)

1989ஆம் ஆண்டு ஆனைக்கோட்டைப் பள்ளத்தடிப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப். ராஜு (கந்தையா முகுந்தன் - முகுந்தன் வீதி, மானிப்பாய் - யாழ். )

2-ம் லெப். காந்தி (இரட்ணசபாபதி புஸ்பகாந்தன்- ஆனைக்கோட்டை, மானிப்பாய்- யாழ். )

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

சிரஞ்சீவி (முத்தையா மனோகரன்-உடப்பு-புத்தளம்)

1992ஆம் ஆண்டு மட்டு - முதிரையடியேற்றம் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

லெப். சேரன் [குணரத்தினம் தேவேந்திராசா - மகிளூர், களுவாஞ்சிக்குடி-மட்டு. ]

இதே தாக்குதலின் போது தப்பியோடிய இராணுவத்தினர் செங்கலடி பாடசாலையினுள் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டதில் கொல்லப்பட்ட மாணவன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6257)

### சிந்தனைக்கு

விடுதலை உற்ற நாட்டின் மேல்,
வீரம் மிக்கவர் வீட்டின் மேல்,
விண்மீன் தெளித்த வெற்றிக் கொடி,
வீறுடன் விளங்கி வீசட்டும் ஒளி.
— பிரான்ஸிஸ் ஸ்காட் கே.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## பொருத்தமான பாராட்டு

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தீரத்தை நான் மெச்சுகிறேன். அவர் ஓர் இலட்சியவாதி சிறியளவில் ஆரம்பித்த ஒரு இயக்கத்தை இரு நாட்டு இராணுவங்களுக்கு எதிராகப் போராடும் அளவிற்குப் பலம் வாய்ந்ததாகக் கட்டி எழுப்பிய ஒரு வீரன். இவ்வாறாக அமைச்சர் தொண்டமான் கடந்த வார ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தலைவர் பிரபாகரனுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

அமைச்சர் தொண்டமானின் இப்புகழாரமானது வெறுமனே, கண்களை மூடிக்கொண்டு தெரிவிக்பட்ட ஒரு பாராட்டுப்பத்திரமல்ல. புலிகளின் வரலாற்றினை உற்றுநோக்கி, அவதானித்ததின் அடிப்படையில் வெளியிடப்பட்டதொன்றாகும். இதனை எவரும் மறுத்துவிட முடியாது.

ஏனெனில், அமைச்சர் தொண்டமான் கூறியது போன்று சிறிய இயக்கமாக ஆரம்பித்த ஓர் இயக்கத்தை திறம்பட நெறிப்படுத்தியதன் மூலம் தலைவர் பிரபாகரன் இரு பெரும் நாட்டு இராணுவங்களை தனித்துநின்று எதிர்த்துப் போராடியுள்ளார். இது ஒரு சாதாரண விடயமல்ல. சிறிலங்காவின் வரலாற்றை புரட்டினாலேயே தலைவர் பிரபாகரன் புரிந்துள்ள சாதனையைப் புரிந்து கொள்ளலாம்.

சிறிலங்காவில் இரு தடவை ஜே. வி. பி மேற்கொண்ட கிளர்ச்சியை சிறிலங்கா இராணுவம் வெற்றிகரமாக நசுக்கியது. ஆளணி எண்ணிக்கையிலும், ஏனைய வசதிகளிலும், விடுதலைப் புலிகளைவிட உயர்வான நிலையில் இருந்தும் ஜே. வி. பி. யை எவ்வாறு சிறிலங்கா இராணுவத்தால் நசுக்க முடிந்தது? விடுதலைப் புலிகளை ஏன் நசுக்க முடியாமல் போனது?

இவற்றிற்குக் காரணம் தலைவர் பிரபாகரனின் சரியான வழிநடத்தலேயாகும். அத்தோடு, நெருக்கடி வேளைகளில் மேற்கொண்ட சிறப்புமிக்க இராஜதந்திர அணுகுமுறைகளுமேயாகும்

மேலும், தென்னாசியாவில், முதலாவது பலம் பொருந்திய இராணுவமாகவும், உலகத்தின் நான்காவது பெரியஇராணுவமுமான இந்திய இராணுவத்துடன் மோதி வெற்றிகொண்டதானது, தலைவர் பிரபாகரனின் இலட்சியப்பற்றிற்கும் கொள்கைத்தெளிவிற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். அன்றைய நிலையில் இந்திய அரசுடன் முரண்பாடுகளை வளர்க்க சிறிலங்கா அரசே அஞ்சியது.

### நவசமசமாஜக்கட்சி தலைமையிலான

# இடதுசாரிகளின் கூட்டணி தேர்தல் ஆணையாளரால் நிராகரிப்பு

(கொழும்பு)

இடதுசாரிகளால் உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை இயக்கம் என்னும் கூட்டணிக்கு அங்கீகாரம் வழங்க தேர்தல் ஆணையாளர் அலுவலகம் மறுத்துள்ளது.

இதே கூட்டணியில் ஏற்கனவே ஆறு கட்சிகள் இணைந்துள்ளதும் தற்போது மேலும் மூன்று கட்சிகள் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையாளரால் மக்கள் விடுதலை இயக்கம் நிராகரிக்கப் பட்டதைத் தொடர்ந்து இந்த கூட்டணி நவசமசமாஜக் கட்சியின் சின்னமான குடை சின்னத்தில், அல்லது நவ ஜனநாயக முன்னணியின் தேர்தல் சின்னமான அன்னம் சின்னத்தில் போட்டியிடலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இக்கூட்டணியினர் வடக்கு, கிழக்கில் தமிழர்களுக்கு கூடுதல் சுயாட்சி வழங்கவேண்டும் என்றும், உலக வங்கியின் தலையீட்டின்கீழ் உதவி பெறுவதை இலங்கை நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து வருவது தெரிந்ததே.

## செட்டிகுளம் பகுதியில் கால்நடைகள் திருட்டு

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் தமிழ்ப் பொதுமக்களின் கால்நடைகளை சிங்களக் குண்டர்கள் லொறிகளில் ஏற்றிச்செல்கின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

இராணுவ நடவடிக்கையினால் செட்டிகுளம் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்துசென்ற மக்கள் அவசரத்தில் தமது கால் நடைகளை கைவிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கைவிட்டுச்சென்ற மாடுகள், ஆடுகளை சிங்களக் குண்டர்கள் லொறிகளில் ஏற்றிச் செல்கின்றனர்.

அப் பிரதேசத்தில் தமிழ் மக்களின் பல்லாயிரக்கணக்கான மாடுகள் கட்டாக்காலிகளாகத் திரிவது குறிப்பிடத் தக்கது.

சிறிலங்கா இராணுவத்தின் உதவியுடன் இந்த மாடுகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டன.

(தி)

## இரண்டு தமிழர்கள் கொழும்பில் கைது

[கொழும்பு]

கிளிநொச்சியைச் சேர்ந்த பாலசுந்தரம் லட்சுமி என்னும் 25 வயதுப் பெண்மணி ஒருவரும், அவரது மைத்துனரான இராமலிங்கம் இரவிச்சந்திரன் என்பவரும் கொழும்பு, பம்பலப்பிட்டிப் பகுதியில் வைத்து பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இரவிச்சந்திரன் விடுதலைப் புலிகளைச் சேர்ந்தவர் என பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### பொதுக்கூட்டம்

வேலணை கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகப் பொதுக்கூட்டம் இம் மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமை சுண்டுக்குளி சென் ஜோன்ஸ் அக்கடமியில் வேலணை கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப் படுகின்றது. மேற்படி கூட்டம் இம் மாதம் 19ஆம் திகதி நடைபெற விருந்து பிற்போடப்பட்டே 29ஆம் திகதி நடைபெற உள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. [22]

## தகப்பனாரின் பெயரில்வந்த சேமலாபநிதி காசோலை

(யாழ்ப்பாணம்)

இலங்கைமத்திய வங்கியிடம் ஊழியர்சேமலாபநிதிக்கு விண்ணப்பித்தவருக்கு அவரது தகப்பனாரின் பெயரில் காசோலை வந்துள்ளது.

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியரான நடராசா என்பவர் முப்பது வருடகாலச்சேவையை பூர்த்தி செய்தபின் தனது 'ஊழியர் சேமலாப நிதி'யைப்பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கியிடம் விண்ணப்பித்துப் பல மாதங்களின்பின் எப்போதோ இறந்துபோன இவரது தகப்பனாரின் பெயரான வேலுப்பிள்ளை என்ற பெயரில் அதுவும் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட காசோலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. சிலதினங்களுக்கு முன்னர் வந்துள்ள இக்காசோலையை பிரஸ்தாப நபர் தனது பெயருக்குமாற்றி பணத்தைப் பெறுவதானால் இவர் கொழும்புவரை அலைந்து திரியவேண்டி ஏற்படும் எனத் தெரிகிறது. (22)

## ஆயுர்வேத கூட்டுத்தாபனம் மக்கள் மயமாக்கப்படும்

(கொழும்பு)

ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் மக்கள் மயமாக்கப்பட்டு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கம்பெனியாக மாற்றப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்கள் இந்த மட்டுப் படுத்தப் பட்ட நிறுவனத்தில் பங்குதாரர்களாகச் சேர்க்கப் படவுள்ளார்கள்.

இது தொடர்பான திட்டமொன்றைக் கடந்த புதன் கிழமை ஜனாதிபதி பிரேமதாஸா அமைச்சரவை முன் சமர்ப்பித்தார். இதனை அமைச்சரவை ஆமோதித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

## புயலென வீசும் பூ

கடல் அலை திரளும்
வாவிகள் சூழும்
வயல் வெளி நிலங்கள்
வனப்புடன் விழிக்கும்
மணல் வெளித் தோப்பில்
மரம் தழுவத் தென்றலும் வீசிடும்
மீன் பாடும் தேன் நாடாம்
மட்டுநகர் மண்ணிலே

பூ ஒன்று
மண் மேலே
நீதிக்கு நீரின்றி
நாவறண்டு ஊன் உருகியது.
உரிமைக்கு உயிர் கொடுக்க
உணர்வோடு உயிர்கொடுத்தது.
உலகத்தின் கண்பார்க்க
உன்னத யாகத்தில் – தேகம்
அவிந்தது.

சுற்றமும் பார்த்தது
முற்றமும் பார்த்தது – சூழ்ந்து நின்று
குற்றமும் பார்த்தது
அதர்மத்தின் ஆணிவேர்
அடியோடு சாய்ந்திட
ஆர்ப்பரித்தெழுந்த புயலம்மா
பூபதியம்மா

கொடுமையின் முற்றத்தை
குடைசாய்த்திடும்
புயலென வீசிடும்
புவிதனில் பேசிடும் – பூபதியம்மா
புயலாக வாராயோ
மண்மீது வீசாயோ

பூக்களின் வாழ்க்கை
புரியாத பூதங்கள்
புவிமீதில் பூக்களும்
பூகம்பம் ஆகிடும்
வாழ்க்கையை வழிதந்த – பூஅம்மா
பூபதியம்மா

நேற்றைய இரவுடன்
நின்றிடும் பூக்களும்
நெடியதோர் மலையிலே
கொடிமலராய்ப் – பாய்ந்திங்கு
பாசம் தவழ்ந்திட – படி
செய்த விடிவம்மா
பூபதியம்மாவே.

– உதயன்

## ஏப்ரலில் மீண்டும் வருவர்

மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள சுமார் 2000 இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் ஏப்ரல், முதல் வாரத்தில் புறப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவர்களை ஏற்றிச் செல்ல கப்பலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நரசிம்மராவ் மீது காங்கிரஸ் நம்பிக்கை

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் பி. வி. நரசிம்மராவின் தலைமையில் கட்சி முழுநம்பிக்கை தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து கட்சிக் திக்க கட்சியின் காரியக் குழு நேற்று முன்தினம் கூடி பத்து மணி நேரம் இது குறித்து விவாதித்தது.

தாம் விடுத்த அறிக்கை வகுப்பு வாதத்தை எதிர்த்து

## வரி அதிகரிப்பு பற்றி மறுபரிசீலனைக்கு ஏற்பாடு

– மாநகர ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

ஆதனம் சம்பந்தமாக யாழ். மாநகர சபையில் வரி மதிப்பு அறிவித்தல் குறித்து நியாய

ளர் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறு கொடுப்பனவு செய்வது வரிக்குறைப்பு விண்ணப்பத்தைப் பாதிக்காது என்றும்,

### விளையாட்டு

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 1.30 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம

கொண்ட கிளர்ச்சியை சிறிலங்கா இராணுவம் வெற்றிகரமாக நசுக்கியது. ஆளணி எண்ணிக்கையிலும், ஏனைய வசதிகளிலும், விடுதலைப் புலிகளைவிட உயர்வான நிலையில் இருந்தும் ஜே. வி. பி. யை எவ்வாறு சிறிலங்கா இராணுவத்தால் நசுக்க முடிந்தது? விடுதலைப் புலிகளை ஏன் நசுக்க முடியாமல் போனது?

இவற்றிற்குக் காரணம் தலைவர் பிரபாகரனின் சரியான வழிநடத்தலே யாகும். அத்தோடு, நெருக்கடி வேளைகளில் மேற்கொண்ட சிறப்புமிக்க இராஜதந்திர அணுகுமுறைகளுமேயாகும்

மேலும், தென்னாசியாவில், முதலாவது பலம் பொருந்திய இராணுவமாகவும், உலகத்தின் நான்காவது பெரியஇராணுவமுமான இந்திய இராணுவத்துடன் மோதி வெற்றிகொண்டதானது, தலைவர் பிரபாகரனின் இலட்சியப்பற்றிற்கும் கொள்கைத்தெளிவிற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். அன்றைய நிலையில் இந்திய அரசுடன் முரண்பாடுகளை வளர்க்க சிறிலங்கா அரசே அஞ்சியது. இலங்கையின் வான் பரப்பிற்குள் புகுந்து இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டபோது சிங்கள அரசு அடக்கியே வாசித்தது. ஏன்? இந்திய இராணுவ பலத்திற்கு சிறிலங்கா அஞ்சியது.

தமிழரின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட தமிழ்க் குழுக்களும் இந்தியாவின் பேச்சிற்கு மறுபேச்சுப் பேச அஞ்சின. இதனால் எதுவித நிபந்தனையுமின்றி சாஷ்டாங்கமாக இந்தியாவின் கால்களில் வீழ்ந்தன.

இவ்வாறு சகலரும் அஞ்சி நடுங்கிய வேளையிலும்தமிழரின் தேசியத்தின் சார்பாக விடுதலைப் புலிகளே அன்று பேசினர். வல்லாதிக்கத்திற்கு எதிராகப் போரிட முடிவெடுத்தனர். தமிழர் தேசியத்திற்குப் பாதுகாப்புக் கொடுக்கமுன் வந்தனர். இதனால், ஏற்பட்ட பல துன்பதுயரங்களையும் தாங்கிக் கொண்டு தமது இலட்சியம் நோக்கி முன்னேறினர்.

இவையாவற்றிற்கும் பிரபாகரன் அவர்களே தலைமை தாங்கினார். புலிகளை வழிநடத்தினார். தன்னந்தனியாகப் புலிகள் போராடினர் இவற்றையெல்லாம் கொண்டே அமைச்சர் தொண்டமான் தலைவர் பிரபாகரனுக்கு புகழாரம் சூட்டியுள்ளாரே ஒழிய, விடுதலைப் புலிகள் மீதுள்ள அபரிதமான அன்பினாலோ அன்றி, தலைவர் பிரபாகரனுடன் உள்ள தனிப்பட்ட நட்பினாலோ அல்ல.

அவ்வாறானால், அமைச்சர் தொண்டமான் முன்னர் எப்பொழுதும் இல்லாதவாறு தற்பொழுது திடீரென இவ்வாறு ஏன் பேசவேண்டும் என்பது குறித்து சிலர் கேள்வி எழுப்பலாம். அதற்கு சிறிலங்காவில் இன்றுள்ள அரசியல் சூழ்நிலையும், அதேவேளை கூறுவதற்கான சந்தர்ப்பமும், அண்மையில்தான் உருவாகியிருந்திருக்கலாம். ஏன்? அமைச்சர் தொண்டமானின் அரசியல் தேவைக்காகக் கூட இருக்கலாம். இதில் எது வேண்டுமானாலும் காரணமாக இருக்கலாம்.

ஆனால் இதில் எதற்காகவும் அமைச்சர் தொண்டமான் பேசி இருப்பினும் தலைவர் பிரபாகரனுக்கு புகழாரம் சூட்ட வேண்டும் என்பதற்காக எதையும் வலிந்து சூட்டியதாக இல்லை. தொண்டமானின் மெச்சலுக்கு தலைவர் பிரபாகரன் முற்றுமுழுதாகத் தகுதியானவரே. ஆனால், இதனை இன்று எதிரிகள்கூட மனதளவில் தானும் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், வெளிப்படையாகத் தெரிவிக்கும் துணிவும் பெருந்தன்மையும் அமைச்சர் தொண்டமானிடம் மட்டுமே இருந்துள்ளது. இது குறித்து தொண்டமான் பாராட்டப்பட வேண்டியவர்தான்.

செய்தபின் தனது 'ஊழியர் சேமலாப நிதி'யைப்பெறுவதற்கு இலங்கை மத்திய வங்கியிடம் விண்ணப்பித்துப் பல மாதங்களின்பின் எப்போதோ இறந்துபோன இவரது தகப்பனாரின் பெயரான வேலுப்பிள்ளை என்ற பெயரில் அதுவும் தனிச்சிங்களத்தில் எழுதப்பட்ட காசோலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.சிலதினங்

## மக்கள் மயமாக்கப்படும்

(கொழும்பு)

ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் மக்கள் மயமாக்கப்பட்டு ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கம்பெனியாக மாற்றப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது. ஆயுர்வேத வைத்தியர்கள் இந்த மட்டுப் படுத்தப் பட்ட நிறுவனத்தில் பங்குதாரர்களாகச் சேர்க்கப் படவுள்ளார்கள்.

இது தொடர்பான திட்டமொன்றைக் கடந்த புதன் கிழமை ஜானாதிபதி பிரேமதாஸா அமைச்சரவை முன் சமர்ப்பித்தார். இதனை அமைச்சரவை ஆமோதித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

## ஏப்ரலில் மீண்டும் வருவர்

மண்டபம் அகதிகள் முகாமிலுள்ள சுமார் 2000 இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர்கள் ஏப்ரல், முதல் வாரத்தில் புறப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவர்களை ஏற்றிச் செல்ல கப்பலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

– உதயன்

## நரசிம்மராவ் மீது காங்கிரஸ் நம்பிக்கை

(டில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் பி. வி. நரசிம்மராவின் தலைமையில் கட்சி முழுநம்பிக்கை தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து கட்சிக்குள் நரசிம்மராவின் கை ஓங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கட்சியின் முக்கிய உறுப்பினர் அர்ஜுன்சிங் வெளியிட்ட அறிக்கை பற்றி விவாதிக்க கட்சியின் காரியக் குழு நேற்று முன்தினம் கூடி பத்து மணி நேரம் இது குறித்து விவாதித்தது.

தாம் விடுத்த அறிக்கை வகுப்புவாதத்தை எதிர்த்து போராடுவது குறித்து விவாதிக்கும் ஒரு முயற்சியே எனவும் எந்த நபர்மீதோ, பதவி மீதோ சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு இல்லை என தெரிவித்த அர்ஜுன்சிங் அவ்வறிக்கையை மீளப்பெற்றுள்ளார்.

## வரி அதிகரிப்பு பற்றி மறுபரிசீலனைக்கு ஏற்பாடு

– மாநகர ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

ஆதனம் சம்பந்தமாக யாழ். மாநகர சபையில் வரி மதிப்பு அறிவித்தல் குறித்து நியாயமற்ற வரி அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக முறையீடு செய்தவர்களை, நேரில் அழைத்து விலை மதிப்பீட்டாளர் முன்னிலையில் பரிசீலனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

இம்மாத முடிவுக்கு முன்னதாக, இவ்வருடத்திற்குரிய வரியை முழுமையாகச் செலுத்துவதன் மூலம் பத்து வீத வரிக்கழிவைப் பெறும் வகையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கும் வரியைச் செலுத்தி உரிய சலுகையைப் பெற்றுக்கொள்ளுமாறும் வரியிறுப்பாளர்களை ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். இவ்வாறு கொடுப்பனவு செய்வது வரிக்குறைப்பு விண்ணப்பத்தைப் பாதிக்காது என்றும், விசாரணையின் பின் வரி குறைக்கப்படும் பட்சத்தில் மேலதிகமாகச் செலுத்திய தொகை அடுத்த காலப் பகுதிக்கு வரவு வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படும் என்றும் அவர் சொன்னார்.

நெருக்கடி மிகுந்த இக் காலப்பகுதியில் மாநகர சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் ஆணையாளரின் அறிக்கை ஒன்று வரியிறுப்பாளரைக் கோருகிறது.

## விளையாட்டு

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 1.30 மணிக்கு இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறும். இப்போட்டியில் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். போட்டிகள் துரையப்பா, அருளம்பலம், ஜெயரத்தினம், சின்னப்பா, சின்னையா இல்லங்களுக்கிடையில் நடைபெறும். (9)

❋ ❋

(பருத்தித்துறை)

வடமராட்சிக்கோட்டஉடற் பயிற்சிப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவுப் போட்டியில் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை நாகர்கோவில் அமெரிக்கன்மிஷன் பாடசாலையும் பெற்றுக்கொண்டன. (25) (36)

❋ ❋

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இப்போட்டியில் லீலாவதி இல்லம் (சிவப்பு) 1-ம் இடத்தையும், தமயந்தி இல்லம் (நீலம்) 2-ம் இடத்தையும், அருந்ததிஇல்லம் (பச்சை) 3-ம் இடத்தையும், கண்ணகி இல்லம் (மஞ்சள்) 4–ம் இடத்தையும் பெற்றன. (11)

❋ ❋

(வடமராட்சி கிழக்கு)

குடத்தனை பொற்பதி றோமன்கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை கலந்து கொள்வார். (36)

மத்திய கிழக்கில்

## மீண்டும் போர் வெடிக்கலாம் அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

அடுத்தமாதத்தில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படாவிட்டால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் யுத்தம் ஒன்று மூளலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வாறன் கிறிஸ்தோபர் அரபுநாடுகளையும், இஸ்ரேலையும் எச்சரிக்கை செய்துள்ளார். சிக்காகோவில், முக்கிய வெளிநாட்டுக் கொள்கை விளக்க உரையொன்றை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இந்தச் சந்தர்ப்பத்தை சகல தரப்பினரும் பயன்படுத்தி அடுத்த இருபதாம் திகதியன்று சமாதானப் பேச்சுக்களை வாஷிங்டனில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

## ஆரம்ப வைபவம்

(தொல்புரம்)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பு அண்மையில் கல்லூரி அதிபர் திரு. கா. சந்திரபாலன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய முன்னைநாள் கோட்டக்கல்வி அதிகாரி திரு. எஸ். வி. மகேசவேல் கலந்து கொண்டார். மேலும் 40 பழைய மாணவிகளும் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர். (41)

## அதிபர் கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களது கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு வருகை தரும் போது கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய உணவு முத்திரைக் கணக்கு விபரங்களையும் கொண்டுவருமாறு பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அதிபர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தி.மு.கவுடன் கூட்டு இல்லை வாழப்பாடி தெரிவிப்பு

[சென்னை]

தமிழ்நாட்டில் தி. மு. கவுடன் காங்கிரஸ் கட்சி எந்த சூழ்நிலையிலும் கூட்டுவைக்க மாட்டாது என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று தெரிவித்தார்.

சேலத்தில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மதசார்பற்ற முற்போக்கு சக்தியுடன் மட்டுமே காங்கிரஸ் கூட்டணி ஏற்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

நரசிம்மராவ் கட்சித் தலைவராகவும், பிரதமராகவும் நீடிக்க வேண்டும் என்ற காங்கிரஸ் செயற்குழுவின் நேற்றைய முடிவையும் ராமமூர்த்தி வரவேற்றார்.

## ஆணைக்குழுவின் முன் இடிஅமீன் சாட்சியம்

(கம்பாலா)

உகண்டாவின் கொடூரமான ஜனாதிபதி என வர்ணிக்கப்படும் இடிஅமீன் அந்நாட்டின் அரச விசாரணை ஆணைக்குழு முன்பாக கடத்தல் மற்றும் கொலைகள் தொடர்பாக சாட்சியம் அளிக்கவுள்ளதாக உகண்டா அரச பத்திரிகையான 'நியூ விஷன்' செய்தி வெளியிட்டுள்ளது.

பதவி கவிழ்க்கப்பட்ட இடிஅமீன் தற்போது சவூதி அரேபியாவில் வாழ்ந்து வருகின்றார். இவரது ஒன்பது வருட ஆட்சிகாலத்தின் போது இழைக்கப்பட்டமனித உரிமை மீறல்களை தற்போதைய உகண்டா அரச ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றது. ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க இடிஅமீன் சம்மதித்துள்ளதாகவும் அப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## மன்னார் மீனவர்களுக்கு ஆழ்கடல் செல்லத் தடை

மன்னார் மாவட்ட மீனவர்கள் ஆழ்கடலுக்குசென்று மீன்பிடிக்கஇராணுவத்தினர் தடை விதித்துள்ள அதே சமயம் கற்பிட்டி புத்தளம் பகுதிகளிலிருந்து வந்த மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர் என தமிழ் எம். பி. ஒருவர் நேற்று பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் கடலில் 5 மைலுக்கு அப்பால் செல்லக்கூடாது என படையினர் தடையுத்தரவிட்டுள்ளமை தெரிந்ததே

## போஷாக்கு கருத்தரங்கு

(தொல்புரம்)

அன்னைபூபதி நினைவு நாளையொட்டி சுழிபுரம் சுகாதாரப் பிரிவினரால் போஷாக்குக் கருத்தரங்குகள் நடாத்தப் பட்டுவருகின்றன.

ஈழநாதம்

## காவிரி நீர்ப் பிரச்சினையை தீர்க்க ஜெயலலிதா தவறிவிட்டார்

வாழப்பாடி குற்றச்சாட்டு

(சென்னை)

காவிரி நீர்ப் பிரச்சினையில் தமிழக மக்களும் காங்கிரஸ் கட்சியும் ஜெயலலிதாவிற்கு பக்கபலமாக இருந்த போதிலும் அவர் அப்பிரச்சினையை தீர்க்க தவறிவிட்டார் என தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்.

இப்பிரச்சினை தொடர்பாக தாம் மத்திய அமைச்சரவையிலிருந்து விலகியதை சுட்டிக் காட்டிய அவர் ஜெயலலிதாவும் அப்படி பதவியை துறந்திருக்கலாமே எனக் கேள்வி எழுப்பினார்.

காவிரிப் பிரச்சினையில் தமிழக மக்களையும் தமிழக அரசையும் காங்கிரஸ்ஏமாற்றி விட்டதாக கடந்த திங்களன்று முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் காங்கிரசை கண்டித்து உரையாற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## பா.ஜனதா-அ.தி.மு.க. கூட்டு தேர்தலுக்கு முன் முடிவாகும்

[பங்களூர்]

பாரதீய ஜனதா-அ. தி. மு. க. கூட்டுபற்றி அடுத்த பொது தேர்தலுக்கு முன் முடிவுசெய்யப்பட்டுவிடும் என பாரதீய ஜனதா பொதுச் செயலாளர் கோவிந்தாச்சார்யா தெரிவித்துள்ளார்.

கர்நாடகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த கூட்டணிக்கான குறிப்பிட்ட திகதி இப்போதே சொல்வதற்கில்லை. பொதுத் தேர்தல் நெருங்கும் போதே அது முடிவாகும் எனத் தெரிவித்தார்.

### விண்ணப்பங்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

1993 ஆம் ஆண்டிற்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான யாழ். மாவட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் நேரடியாக சகல பாடசாலைகளுக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

மேலும் இவ் விண்ணப்பப் படிவங்கள் நேற்று முன்தினம் தொடக்கம் பாடசாலைகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

## பம்பாய் குண்டு வெடிப்பு

# விசாரணைக்கு உதவ பாகிஸ்தான் தயார்

(இஸ்லாமாபாத்)

பம்பாய் குண்டு வெடிப்பு தொடர்பான சந்தேக நபர்கள் குறித்த விசாரணைக்கு உதவுமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்வதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவரும் சந்தேகநபர்கள் டுபாயிலிருந்து கராச்சி வந்துள்ளதாக கருதப்படுவதாக இந்திய வெளியுறவு அமைச்சு பாகிஸ்தான் தூதரகமூடாக பாகிஸ்தானுக்கு அறிவித்துள்ளது.

நவாலியூர்

வளர்மதி சனசமூக நிலையம் நடாத்தும்

**அன்னை பூபதியின்**

**5-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்**

காலம்: 26-03-1993 வெள்ளி மாலை 7-30 மணி

இடம் : நவாலி மகா வித்தியாலய மைதானம்



### பூசா

தலை செய்ய வேண்டும், வழக்குத் தாக்கல் செய்வதில் உள்ள இடர்களை அகற்ற வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

இம் முகாமில் உள்ளவர்கள் இது தொடர்பாக 1992 டிசெம்பர் மாதம் சட்டமா அதிபருக்கும் 1993 ஜனவரி மாதம் நீதிபதிகளின் சங்கத்திற்கும், ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், எதிர்க் கட்சித் தலைவர்கள், உள்ளூர் வெளியூர் மனிதநேய நிறுவனங்கள் முதலியவற்றுக்கும்

### வீரவணக்க கூட்டம்

3ஆம் மாதங்களில் (மார்ச்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்ட-தெல்லிப்பழை / உடுவில் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 7-30 மணிக்கு சங்குவேலி பிள்ளையார் கோவிலடியில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் சிறப்புப் பேச்சாளர்களின் உரைகள் இடம்பெறும். இவ் வீரவணக்கக் கூட்ட முடிவில் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (90)

### தமிழகத்தில் குண்டு வெடிப்பு

தமிழகத்தில் பெரியகுளம் என்ற பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு குண்டு ஒன்று வெடித்ததில் பாலம் ஒன்று சிறு சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. குண்டினால் பாலத்தில் அரை அடி ஆழத்திற்கு குழி ஏற்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலீஸார் வெடிக்காத மற்றுமொரு குண்டையும்மீட்டனர். இக் குண்டு வெடிப்பிற்கு காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

### அதிபர்

அந்த மகஜரில்—

அதிபர்களின் சம்பளத் திட்டம் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளத்தை விடக் குறைவாக உள்ளது. பட்டதாரி ஆசிரியர்கள் அதிபர் சேவையை விரும்பும் வகையில் அதிபர் சேவையின சம்பளத் திட்டத்தை உயர்த்த வேண்டும் என்றும்,

ஆரம்ப மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் சிலர் உயர் புள்ளிகளைப்பெற்றும் அவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. கடிதங்கள் கிடைக்காததால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம், இவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைக்க வேண்டும் என்றும்,

கல்வி நிர்வாகம் வடபகுதியில் குறிப்பாக மூன்று மாவட்

# மட்டு. கிராமங்கள் படையால் சுற்றிவளைப்பு

## பல பொதுமக்கள் கைது

மட்டக்களப்பில் மாவடி வேம்பு என்ற கிராமத்தை அதிகாலை 4 மணிக்கு சுற்றி வளைத்த கொம்மாந்துறை இராணுவத்தினர் அங்கிருந்து ஆண், பெண் இருபாலாரையும் கைது செய்து அருகில் உள்ள கோவில் ஒன்றிற்குக் கொண்டுசென்றனர்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இச்சம்பவத்தின்போது அழைத்துச் செல்லப்பட்டவர்கள் தலையாட்டிமுன் நிறுத்தப்பட்டனர். இதில் 5 பொது மக்கள் கைதாகி இராணுவ முகாமிற்குக் கொண்டு செல்லப்பட்டு. பின்னர் நால்வர் விடுவிக்கப்பட்டனர். சு சின்னத்தம்பி என்பவர் தொடர்ந்தும் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதேசமயம் மறுநாள் இரவு 10 மணியளவில் சித்தாண்டி படையினர் தேசத்துரோகிகளுடன் இணைந்து அப்பகுதி வீடுகளினுள் நுழைந்து நான்கு பொதுமக்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர். சித்தாண்டியைச் சேர்ந்தவர்களான ராஜா(24வயது), ரவி (26 வயது), கந்தசாமி (20 வயது), செல்வம் (25 வயது, திருமணமானவர்)ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இப்போது இவர்களை தாம் கைதுசெய்யவில்லைஎன படையினர் கூறுகின்றனராம்.

மாவடி வேம்பைச் சேர்ந்த திருமணமான ஈ. செல்வராஜா (22வயது) என்பவரையும் நம சிவாயம் ரவி என்பவரையும் கடந்த சனியன்று வெவ்வேறு சம்பவங்களில் கைதுசெய்து முகாம் கொண்டு சென்றனர்.

### எறிகணை வீச்சு

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முற்பகல் 11-55 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இதேவேளை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது

சுமார் பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் இவ்வாறு தொடர்ச்சியாக ஏவப்பட்ட போதிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள்தெரியவரவில்லை (41)

### எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தில் வசிக்கும் ஜெயசிலன்

## மாதகலில் சிக்கியுள்ள 78 பேரின் விபரம்

(நமது நிருபர்)

கடந்த வருடம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது மாதகல் இளவாலைப் பகுதிகளில் சிக்கிய பொதுமக்களின் பெயர்விபரங்கள் கிடைத்துள்ளன மாதகல் பகுதியில் 78 பேரும். இளவாலைப் பகுதியில் 145 பேரும் சிக்கியுள்ளனர்.

இதில் மாதகல் பகுதியில் சிக்கியுள்ளோர்பற்றிய விபரங்கள் இன்றைய பத்திரிகையில் வெளிவருகின்றது. இளவாலைப்பகுதியில் சிக்கியுள்ளோர் விபரம் சனிக்கிழமைஈழநாதத்தில் வெளிவரும்.

தியாகர் ஆறுமுகம், ஆறுமுகம் நவரத்தினம், அம்பலவாணர் அன்னமலர், அம்பலவாணர் அமிர்தநாதன்,இராமலிங்கம் அற்புதலிங்கம், அற்புதலிங்கம் கற்பகம், அற்புதலிங்கம் பரராசலிங்கம், பரராசலிங்கம் அனேத்துவசெல்வம், சீலன் பொன்னன், பொன்னன் சின்னன், விசுவநாதர் சபாரத்தினம், சபாரத்தினம் குஞ்சரம், முருகேசு கார்த்திகேசு, கார்த்திகேசு செல்லம்மா, முருகேசு சேதுராசா, சேதுராசா தெய்வானை, கணபதிப்பிள்ளை நடராசா, நடராசா அன்னலட்சுமி, செல்லப்பா திருச்சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம் பூங்கோதை, ஆறுமுகம் சிவானந்தம், சிவானந்தம் தெய்வானை,செல்லையா குழந்தைவேலு, குழந்தைவேலு முத்துப்பிள்ளை, நாகமணி குமாரசாமி, குமாரசாமி தங்கமுத்து, கந்தையா செல்லப்பா, செல்லப்பா மகேஸ்வரி, கந்தரத்தினம் தங்கம்மா, கந்தரத்தினம் பாலசுப்பிரமணியம், வீரகத்தி தங்கராசா, தங்கராசா அன்னலட்சுமி, சந்தியா அன்னம்மா, பிலிப்பாள், சுந்தரராசசிங்கம், சுப்பர் முருகேசு, சேதுபதி பொன்னம்மா, சின்னத்தம்பி கந்தையா. சிவலோகர் வன்னித்தம்பி, பொன்னம்பலம் சரஸ்வதி, கந்தையா சின்னம்மா, தங்கராசாபுஸ்பராணி சந்திரசேகரம் அன்னம், விநாயகமூர்த்தி செல்லம்மா, கந்தசாமி உருத்திரா, செபவேத்தி அந்தோனி, குமாரசாமி இராசாத்தி, இராமுப்பிள்ளை கந்தசாமி. கந்தையா கமரப்பிள்ளை, சுப்பிரமணியம் தவமணி, செபஸ்ரியாம்பிள்ளை பொன்கலன், செல்லம்மா, தம்பையா சுந்தரம், சின்னம்மா, தமோதரம்பிள்ளை விசுவாசம், சின்னத்தம்பி வைத்தியலிங்கம், கந்தையா மாணிக்கம், சிந்தாமணி, செல்லப்பா பரமேஸ்வரி, கந்தையா சீதாங்கணி, சிற்றம்பலம் இராசம்மா,இரத்தினம் பாலாம்பிகை, சின்னம்மா, செல்லம்மா, விநாயகராசா நேசம்மா, ஆறுமுகம் சுப்பிரமணியம், விக்கிரமசிங்கம் முத்தன், கந்தன், ஆண்டி, முத்துலிங்கம் சின்னம்மா,செல்லர் சின்னத்துரை, முத்துலிங்கம் சின்னம்மா, செல்லா சின்னத்துரை, இலங்காதேவி, திசா.

### விசகடி வைத்தியர் படையால் கைது

மட்டக்களப்பில் 40 ஆம் கிராமத்தை சேர்ந்த [illegible]கடி வைத்தியரான ச[illegible]ம் என்பவர் இரு வாரங்[illegible] முன் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 36 ஆம் கிராம இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டார். ஐந்துபிள்ளைகளுக்கு தந்தையான இவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

### கிளாலியில்

தொடர்ந்து இரவு 7 மணி முதல் பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கிளாலி கரையோரப் பகுதியை அண்டி அகோர எறிகணைத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டவண்ணமுள்ளன.

இதேவேளை கிளாலி கடற்பரப்பில் ரோந்து சுற்றிய வண்ணமிருந்த இரண்டு சிறிலங்கா

நவாலியூர்

வளர்மதி சனசமூக நிலையம் நடாத்தும்

# அன்னை பூபதியின்

5-வது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள்

காலம்: 26-03-1993 வெள்ளி மாலை 7-30 மணி

இடம் : நவாலி மகா வித்தியாலய மைதானம்



நிகழ்ச்சிகள்

1. அஞ்சலிக்கூட்டம்

த. வி. பு. கலை, பண்பாட்டுக் கழக முக்கியஸ்தர்கள் கலந்துகொள்கிறார்கள்.

2. வில்லிசை

'விடுதலை வேண்டி நின்ற அன்னை'

(லெப். பரமதேவா இடம்பெயர்ந்தோர் முகாம் கலைஞர்கள்)

3. புராண இசை நாடகம்

அகில இலங்கை வானொலிப் புகழ் நடிகமணி V. V. வைரமுத்துவின் வாரிசுகளான நவாலியூர் கலைஞர்கள் இணைந்து வழங்கும்

# அரிச்சந்திரா மயான காண்டம்

அரிச்சந்திரன் S. சிவராஜா

சந்திரமதி M. தைரியநாதன்

சத்தியகீர்த்தி K. நடராஜா

(4564)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


பிரதமர் நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவரும் சந்தேகநபர்கள் டுபாயிலிருந்து கராச்சி வந்துள்ளதாக கருதப்படுவதாக இந்திய வெளியுறவு

## பூசா

தலை செய்ய வேண்டும், வழக்குத் தாக்கல் செய்வதில் உள்ள இடர்களை அகற்ற வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

இம் முகாமில் உள்ளவர்கள் இது தொடர்பாக 1992 டிசெம்பர் மாதம் சட்டமா அதிபருக்கும் 1993 ஜனவரி மாதம் நீதிபதிகளின் சங்கத்திற்கும், ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர்கள், உள்ளூர் வெளியூர் மனிதநேய நிறுவனங்கள் முதலியவற்றுக்கும் அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை அவை தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

பூசா உண்ணா விரதத்தினைத் தடுத்து வைக்கப்பட்டோர், காணாமல்போனோர் நலன்காக்கும் சங்கம் ஒழுங்கு செய்து வருகின்றது.

## தீவுப்பகுதி

றினர். பின்னர் எழுவைதீவு, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, வேலணை சாட்டி பகுதியிலும் இரு தினங்கள் ஆராதனை நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். மண்டைதீவுக்கு விசேட அனுமதி பெறுமாறு கூறப்பட்டதால் அப்பகுதிக்கு செல்ல முடியவில்லை எனதெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு தவிர்ந்த ஏனைய பகுதிகள் வெறிச் சோடிக் கிடப்பதாகவும் மாலை 7 மணி முதல் காலை 5 மணிவரை அங்குள்ள மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவகம் முழுவதும் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது எனவும் ஒவ்வொரு பகுதிக்குச் செல்வதற்கும் அனுமதி பெற வேண்டும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஆசிகுளம்

ஸ்தாபனத்தினர் தமது வாகனங்களில் இந்தஅகதிமக்களை ஏற்றிவந்தனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த முப்பத்தைந்து குடும்பத்தினரே கடந்த வாரம் வந்தனர்.

வவுனியா நகரப்பகுதியில் உள்ள அகதி முகாம்களில் வாழும் அகதி மக்கள் அனைவரும் இராணுவம் அற்ற பகுதியை நாடி வருவதில் மிக ஆர்வமாக இருக்கின்றனர் என்றுதெரிவிக்கப்பட்டது.(தி)

## அதிபா

அந்த மகஜரில்—

அதிபர்களின் சம்பளத் திட்டம் பட்டதாரி ஆசிரியர்களின் சம்பளத்தை விடக் குறைவாக உள்ளது. பட்டதாரி ஆசிரியர்கள் அதிபர் சேவையை விரும்பும் வகையில் அதிபர் சேவையின சம்பளத் திட்டத்தை உயர்த்த வேண்டும் என்றும்,

ஆரம்ப மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் சிலர் உயர் புள்ளிகளைப்பெற்றும் அவர்கள் நேர் முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. கடிதங்கள் கிடைக்காததால் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம், இவர்களை நேர் முகத் தேர்வுக்கு அழைக்க வேண்டும் என்றும்,

கல்வி நிர்வாகம் வடபகுதியில் குறிப்பாக மூன்று மாவட்டங்களில் சீர்குலைந்துள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சின் சிபார்சு இல்லாமலேயே ஒரு பணிப்பாளருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. தகுதியற்றவர்கள் பலர் கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நிலை இனிமேலாவது தவிர்க்கப்பட வேண்டும். கல்விச் சேவைச் சபைக்கு தமிழ் தெரிந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். 1-1-1989 முதல் 31-12-1989 வரை சேவை ஆற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் அத்துடன் வட மாகாணத்தில் நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் செப்ரெம்பர் முதலாம் திகதியாக மாற்றியமைக்கப்படவேண்டும் என்றும், பதில் அதிபர்கள் நிரந்தரமாகப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## ஐ. தே. கவை

தல்களில் மலையகத்தில் ஐ தே. க. இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இ. தொ. கவின் புதிய நிபந்தனையால் எழுந்த நெருக்கடியைத் தீர்க்க ஐ.தே.க.முக்கிய உறுப்பினர்கள் சிலர் கடந்த ஒருவார காலமாக இ.தொ.க.வுடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இ. தொ. கவின் கோரிக்கைகளை அரசு நிறைவேற்றினால் அது மலையகத்தில் தனி நாடு ஒன்றை அமைப்பதற்கே வழிவகுப்பதாகிவிடுமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி எச்சரித்துள்ளது. தொண்டமான் தனியான தமிழ் மாகாணத்தை உருவாக்கி அதை வடக்கு-கிழக்கு பகுதியுடன் இணைக்க முயல்வதாக மலையகத்திலுள்ள சில பௌத்த பிக்குகளும் கருத்து தெரிவித்துள்ளனர் எனதெரிய வருகிறது.

நேற்று முற்பகல் 11-55 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இதேவேளை பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று மாலை 6 மணியளவில் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது

சுமார் பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் இவ்வாறு தொடர்ச்சியாக ஏவப்பட்ட போதிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள்தெரியவரவில்லை (41)

## எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் தொடர்மாடிக் கட்டடத்தில் வசிக்கும் ஜெயசீலன் (வயது 23) என்பவர் விளக்கு விழுந்து உடைந்து தீப்பற்றியதில் பலத்த எரிகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுமுன்தினமிரவு 8.30 மணியளவில் வீட்டின் கூரைப் பகுதியில் தொங்கவிடப்பட்ட விளக்கின் கீழே படுத்திருந்த போது அது மேற்படி நபரின் மேல் விழுந்தபோதே அவர் இந்த எரிகாயங்களுக்குள்ளானார். முகம், கைவிரல்கள், மார்புப் பகுதி போன்றன பலத்த எரிகாயங்களுக்குட்பட்ட நிலையில் இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

## மரத்திலிருந்து வீழ்ந்து மரணம்

(புதுக்குடியிருப்பு)

மரத்திலிருந்து தவறிவீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

நேற்று முன்தினம் மாலை தொழிலுக்காகப் பனை மரத்திலேறிய இரணப்பாலை புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை பரமேஸ்வரன் (வயது 33) என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே தவறி வீழ்ந்து பலியானவராவார்.

## விசேட

கற்கும் மாணவர்கள் தமது கல்வியை இடை நிறுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. [பா]

## ஒரு வருடத்திற்கு

50), ரமணி தேவராசா (வயது 46), அமலி தேவராசா (வயது 17), அமலன் தேவராசா (வயது 11), பவானி தேவராசா (வயது 23), ஊர்காவற்றுறை,சுருவில், மற்றும் எழுவைதீவு இரண்டாம் வட்டாரத்தைச்சேர்ந்தசண்முகம். சிவபாலன், அந்தோனிப்பிள்ளை, செல்வநாயகம், அலோசியஸ், மரியதாஸ்

நடராசா, நடராசா அன்னலட்சுமி செல்லப்பா திருச்சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம் பூங்கோதை, ஆறுமுகம் சிவானந்தம், சிவானந்தம் தெய்வானை,செல்லையா குழந்தைவேலு, குழந்தைவேலு முத்துப்பிள்ளை, நாகமணி குமாரசாமி, குமாரசாமி தங்கமுத்து, கந்தையா செல்லப்பா, செல்லப்பா மகேஸ்வரி, கந்தரத்தினம் தங்கம்மா, கந்தரத்தினம் பாலசுப்பிரமணியம், வீரகத்தி தங்கராசா, தங்கராசா அன்னலட்சுமி, சந்தியா அன்னம்மா, பிலிப்பாள், சுந்தரராசசிங்கம், சுப்பர் மூருகேசு, சேதுபதி பொன்னம்மா, சின்னத்தம்பி கந்தையா. சிவலோகர் வன்னித்தம்பி, பொன்னம்பலம் சரஸ்வதி, கந்தையா சின்னம்மா, தங்கராசாபுஸ்பராணி சந்திரசேகரம் அன்னம், விநாயகர் கந்தையா, அம்பலவாணர் சின்னத்தங்கம், அம்பலவாணர் வேலுப்பிள்ளை,இராமுப்பிள்ளை அப்பையா, கண

என்பவர் இரு வாரங்களுக்கு முன் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு 36 ஆம் கிராம இராணுவ முகாமிற்கு கொண்டுசெல்லப்பட்டார்.ஐந்துபிள்ளைகளுக்கு தந்தையான இவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

## கிளாலியில்

தொடர்ந்து இரவு 7 மணி முதல் பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து கிளாலி கரையோரப் பகுதியை அண்டி அகோர எறிகணைத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டவண்ணமுள்ளன.

இதேவேளை கிளாலி கடற்பரப்பில் ரோந்து சுற்றிய வண்ணமிருந்த இரண்டு சிறிலங்கா கடற்படை விசைப்படகுகளிலிருந்து கரையோரப் பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது [86]


இன்று மங்களகரமான ஆரம்பம்

# கிருஷிகா ஆடை அகம்

இன்று வியாழக்கிழமை காலை 7.45 முதல் 9.15 வரையிலான சுபவேளையில் நவீனசந்தையில்

## கிருஷிகா ஆடை அகம்

மங்களகரமான ஆரம்பம்

ஆடவரும், பெண்டிரும், ஆடிவரும் குழந்தைகளும், அணிந்து ஆனந்தமடைய ஆயிரக்கணக்கான துணிவகைகளை அள்ளிவழங்கும் ஜவுளி சமுத்திரம்

# கிருஷிகா ஆடை அகம்

69 A, நவீனசந்தை உள்புறம், யாழ்ப்பாணம்

குறிப்பு:- ஸ்ரான்லிவீதி சந்தி சுகுனாஸ் புடவை மாளிகையினர் வாடிக்கையாளர்களின் நலன்கருதி நவீன சந்தையில் கிருஷிகா ஆடை அகத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

விளம்பர அமைப்பு:
ஷண் றெக்கோடிங் ஸ்பொட், நவீனசந்தை.
[4076]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 24-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8760

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்
இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
26-0407, 28-7978, 26-6062 26-1690, 26-2668, 42-6226, 26-0355, 24-2680, 28-0732, 40-1516, 26-0525, 43-0517, 27-7711.